புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# புறநானூறு கபிலர் பாடல்களில் பொருளாதாரம்

முனைவர் சி. முத்தழகு,
உதவிப்பேராசிரியர் தமிழ்த் துறை
எஸ்.ஆர்.எம். திருச்சி கலை அறிவியல் கல்லூரி,
இருங்களூர், சமயபுரம் அருகில்,
திருச்சிராப்பள்ளி-621 105.
தமிழ்நாடு, இந்தியா.

ஆய்வுச்சுருக்கம்

நாம் காணும் உலகில் அனைத்தும் நிலையற்றது. அனைத்திற்கும் பொருளே அடிப்படை என்று கருதும் சமகாலச் சமூகம் பொருளுக்காக எதையும் செய்துவிடத் துணிகிறது. பொருள் இல்லாதவருக்கு இவ்வுலகத்து வாழ்க்கை இல்லை என்பதைப் பிடித்துக் கொண்டு இவ்வுலகம் அலைந்து திரிகிறது. மனித மாண்புகளற்ற செயல்களில் ஈடுபடுகிறது. பட்டமும், பதவியும், சொத்து சுகங்களும், ஆடம்பர வாழ்வுமே இன்று சிறந்தது என்று நினைக்கின்றனர். ஆனால் பழந்தமிழர்கள், இருப்பவர் இல்லாதவர்க்கு கொடுத்து உதவுவது என்பது கடமை என்று வாழ்ந்தனர். இம்மை, மறுமை பயன் கருதாது பிறருக்கு பொருள் உதவி செய்வதே ஈகை என்று கூறுகின்றனர். சமூகமும் பொருளாதாரமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவையாகும். ஒன்று மற்றொன்றின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும், அவை காலச்சூழலுக்கு ஏற்றார்போல மனிதனைச் செயல்பட வைக்கின்றது. சங்க இலக்கியங்களில் காணப்படும் பொருளாதாரம் எளிதானதாகவும், தன்னிறைவுடையதாகவும் இருந்திருக்க வேண்டும். ஏனெனில் மக்கள் தொழில் முயற்சி உடையவர்களாகவும், விவசாயம் செய்பவர்களாகவும், சொந்த முயற்சியில் செல்வம் ஈட்டி நல்வாழ்க்கை வாழ்தலில் நம்பிக்கை உடையவர்களாகவும் இருந்தனர்.

இன்று போல அன்றும் செல்வந்தரும், வறியவரும், இவற்றிற்கு இடைப்பட்ட வகுப்பினரும் இருந்தனர். இத்தகைய பொருளாதார நிலை குறித்து சங்ககால இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. மக்கள் அன்றாட வாழ்க்கைக்கு பொருள் மிக மிக அவசியமாகின்றது. குணத்தைவிட பணத்திற்கே முதலிடம் தரப்படுகின்றது. இன்றைய நிலையில் மனிதர்களை மட்டுமல்ல, நாடுகளின் தரத்தைப் பிரிக்கும்போது, பணக்கார நாடுகள், ஏழை நாடுகள் என்றுதான் உலக அரங்கில் குறிப்பிடப்படுகின்றது. ஒரு நல்ல அரசு அமைய சமுதாய அமைப்போடு பொருளாதார அமைப்பும் சீராக இருக்க வேண்டும். ஒரு நாட்டுக்கு வரலாற்றுப் பெருமைகள் மட்டுமே ஒரு சமூகத்தின் மதிப்பைத் தீர்மானித்து விடுவதில்லை. சமகாலத்தில் அதன் இடத்தைத் தீர்மானிப்பதில் பொருளாதாரம் முக்கியமான பங்கு வகிக்கின்றது. பொருள் ஈட்டுதலை இல்லறம் மேற்கொள்வோர் தம் கடனாகவே பழந்தமிழர் கருதினர். அதனால் பொருள் வயிற் பிரிவு என்ற பிரிவும் இல்லற இலக்கணத்தில் இடம்பெற்றிருந்தது. இப்படி நாடாக இருந்தாலும், வீடாக இருந்தாலும் பொருளாதாரம் அவசியமானது என்பதை உணர முடியும்.

அந்த வகையில் இவ்வுலகில் எவ்வளவோ இலக்கியங்கள் இருப்பினும் சங்க இலக்கியத்திற்கு ஈடு இணை இல்லை. அவ்விலக்கியங்கள் இன்பம் தருவதை மட்டும் நோக்கமாகக் கொள்ளாமல் தக்க அறிவுரைக் கருத்துக்களை கூறி, வாழ்க்கை நெறிகளை வகுத்து மக்களின் உள்ளங்களைப் பண்படுத்தும் நெறியிலும் தலைசிறந்து நிற்கின்றன. இவை போன்ற பண்புகள் புறநானூற்றில் கபிலர் பாடல்களிலும் காணப்படுகின்றன. இலக்கியங்களின் பயன் மக்களின் மனக்கோட்டங்களைத் தீர்ப்பதாகும். கபிலர் பாடல்களில் கற்பனையை விட உண்மைதான் உயிர்நாடியாய் உள்ளது. மிகுதியான பாடல்களைப் பாடியவராகவும்,

தலைமையானவராகவும், நட்புக்கு இலக்கணமாகவும், பல்வேறு சிந்தனைகளை பாடியவராகவும் போற்றப்படும் கபிலர் பாடிய புறநானூற்றுப் பாடல்களில் பொருளாதாரம் பற்றிப் பேசுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

முன்னுரை

தனிமனிதனிடம் செல்வம் குவியாமல் தடுத்து, செல்வம் குவிந்திருந்தால் பறித்து, எல்லாருக்கும் பகிர்ந்து பங்கிட்டு அளிப்பது பொது உடைமை நெறி. மரபு வழியிலோ பிற வழியிலோ செல்வத்தையும், செல்வாக்கையும் குறித்து வைத்துக் கொண்டாடுவது தனி உடைமை நெறி. பலரை வாழவைக்கச் சிலரிடம் சேர்ந்திருக்கும் செல்வத்தைச் சட்டத்தின் மூலமோ வன்முறையின் மூலமோ பறிமுதல் செய்து கொடுக்கச் சொல்கிறது பொது உடைமைப்பாதை. இதனால் சிலர் வாட, பலர் வாழ நேருகிறது. இருபக்கமும் இருக்கின்ற வாட்டத்தைத் தவிர்த்து வாழ்க்கைக் கொடுக்கும் கொள்கை ஒன்று உண்டு. செல்வம் குவிந்திருக்கும் செல்வர்கள் தாங்களே மனமுவந்து இல்லாதார்க்கும் வழங்கும் தருமநெறி சங்ககாலத்தில் இருந்தது. அதுதான் கொடைப்பண்பு, வேளாண்மை, வாணிபம், பொது வருவாய்கள் இவையெல்லாம் பொருளாதாரம் என்ற ஒரு நிலையில் கொண்டு இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

வாழ்க்கைக்கு உறுதிபயக்கும் பொருள்கள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன இவற்றுள் வீடு நீங்கிய ஏனை மூன்றையும் தொல்காப்பியம்

"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை" (தொல்.பொருள். 1038)

என்ற நூற்பாவில் சுட்டுகிறது. அவ்வாறே சங்க இலக்கியமும் அறம், பொருள் என்ற இரண்டைப் புறப்பாடல்களும் இன்பத்தை அகப்பாடல்களும் விரித்துக் கூறுகின்றன.

இதனையே நம்முடன் வாழ்ந்த பாரதியாரும் சுயசரிதையில்,
பொருளிலார்க்கு இல்லை இவ்வுலகு என்னும்
புலவர் தம் மொழி பொய்யாமொழியன்று காண்,
பொருளிலார்க்கு இனமில்லை, துணையில்லை
பொழுதெல்லாம் இடர்வெள்ளம் வந்தேற்றுமால்
(பாரதி. சுயசரிதை பாடல் 43)
பொருளில்லாதவர்களின் அவல நிலையை விளக்கமாகவே கூறிவிடுகிறார்.

வேளாண்மை

எந்த நாட்டின் பொருளியல் வளர்ச்சிக்கும் வேளாண்மையே அடிப்படையானது. உலக நாடுகள் அனைத்தின் அடிப்படைத் தொழிலும், பொருளாதாரமும் இதுதான். மனிதனின் இன்றியமையாத் தேவைகளுள் முதன்மையான ஒன்றை நிறைவு செய்வது வேளாண்மையே. மக்கட் சமுதாயத்தின் பசி போக்கும் முயற்சியாம் வேளாண்மை, பொருளியிலின் வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கிறது. தமிழரின் வேளாண் அறிவு, பாசன வசதி பருவநிலை விவசாயம் என்னும் வேளாண்மைத் தொடர்பான செய்திகள் பல. புறநானூற்றில் கபிலர் பாடல்களில் காணப்பெறுகின்றன. வேளாண்மைக்கு இன்றியமையாத நிலமும், மழையும், உழைப்பும், இம்மூன்றும் இல்லாவிடத்து விவசாயம் இல்லை. ஆற்று நீர்ப்பாசன வாய்ப்புடையோர் ஆற்றில் நீர் வரும் காலம் அறிந்து விவசாயம் செய்தனர். வான் பொய்ப்பினும் தான் பொய்யா என்று மழைவளம் கருதாது, தம் உழைப்பாலே ஊற்று நீர் கொண்டும் விவசாயம் செய்தனர். நாடும் காடும் திருத்தி மேடுபள்ளம் செப்பனிட்டு வேளாண்மை செய்தனர்.

உழைப்பால் நிலத்தை மகிழச் செய்து பயன் அறிந்த மக்கள், நீருக்கு இன்றியமையாத மழையை மகிழச் செய்வதற்கு வழிபாடே வழி என எண்ணி பழனிமலை குறக்குடி மக்கள், வேண்டிய பொழுது மழை பொழியவும், மிகுந்து பெய்யும் பொழுது நிறுத்தவும் கடவுளைப் போற்றினர் என்பதனை,

"மலை வான் கொள்க! என உயர்பலி தூஉய்
மாரி ஆன்று, மழைமேக்கு உயர்க! எனக்
கடவுட் பேணிய குறவர் மாக்கள்," (புறம். 143: 1-3)

என்ற பாடலில் கபிலர் கூறுகின்றார்.

*கார் காலங்களில் மழை நன்கு பெய்தது. காட்டுப் பூக்கள் பூத்தன தினை முதலியவை மிகுதியாக விளைந்தன. மழை பெய்தலால் உண்டாகிய ஈரத்தில் புழுதி கலந்து விளங்குமாறு பலவகையால் உழுங்கருவி கொண்டு சால் ஓட்டிப் பயிரிடப்பட்ட சாமை மிகுதியாக விளையலாயிற்று. தினை அறியப்பட்டன, எள்ளிளங்காய் அறுக்கப்பட்டன, வெண்மை நிறங்கொண்ட அவரைக்காய் பறிக்கப்பட்டன என்பதை,*

*"கீழும் மேலும் எஞ்சாமைப் பலகாய்த்து*
*வாலிதின் விளைந்த புதுவரகு அரியத்*
*தினைகொய்யக், கவ்வை கறுப்ப அவரைக்*
*கொழுங்கொடி விளர்க்காய் கோள் பதம் ஆக*
*நிலம் புதைப் பழுனிய மட்டின் தேறல்" (புறம் 120: 8-12)*

*பாடல் உணர்த்துகிறது. மனித வாழ்க்கைக்கு உணவு, உடை, இருப்பிடம் என்பவை இன்றியமையாதவையாகக் கருதப்படுகின்றன. இவற்றுள் உணவே வாழ்வின் முதன்மை ஆதாரமாக உள்ளது. நாகரிக வளர்ச்சியின் காரணமாகத் தமக்குத் தேவையான உணவுப் பொருட்களை தாம் உற்பத்தி செய்து பொருளாதார ரீதியாக வளர்ந்தான். இதனை வள்ளுவரும் பிற தொழிலைச் செய்கின்றவர்களையும் உழவர்கள் தாங்குவதால், உழவர்கள் உலகத்தார்க்கு அச்சாணி போன்றவர்கள் என்பதை,*

*"உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃது ஆற்றாது*
*எழுவாரை எல்லாம் பொறுத்து" (குறள் 1032)*

*இவ்வாறு தன் குறள் வழியாக கூறுகின்றார்.*

*நில நிலைமைக்கு ஏற்ப நீர்ப்பாசன வசதிகளைச் செய்து கொண்டனர். பள்ளமான நிலப்பகுதிகளில் நீர்த் தேக்கங்களை அமைத்து வேளாண் வளத்தைப் பெருக்கும் முயற்சியை மேற்கொண்டனர்.*

*"பெய்யினும், பெய்யாது ஆயினும், அருவி*
*கொள் உழு வியன்புலத் துழைகால் ஆக,*
*மால்புடை நெடுவரைக் கோடு தோறு இழிதரும்" (புறம் 105: 4-6)*

*என வேள்பாரியைக் கபிலர் பாடிய பாடலடிகள் அன்று அருவி மூலம் நீர்ப்பாசனம் இருந்ததும், அருவி போல் உயர்ந்தவன் பாரி என்பதையும் கூறுகின்றார். தேக்கப்பட்ட நீர் தேவையான போது பாசனத்திற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்நீரைப் பயன்படுத்தி உழுது பயிரிட்டனர் என்பதற்கு இப்பாடல் சான்றாகும்.*

*"கார்ப்பெயல் கலித்த பெரும்பாட்டு ஈரத்துப்*
*பூழி மயங்கப் பலஉழுது வித்திப்" (புறம் 120: 2, 3)*

*உழவர் உழுது விதைப்பர் என்பதை இன்மூலம் அறியலாம். இதனையே வள்ளுவரும் நன்கு உழுது விதைத்தால் ஒரு பிடி எருவும் இட வேண்டியதில்லை பயிர் செழித்து விளையும் என்பதைக் கூறுகிறார்.*

*"தொடிப்புழுதி கஃசா உணர்க்கின் பிடித்து எருவும்*
*வேண்டாது சாலப்படும்" (குறள் 1037)*

*இதன் மூலம் சங்ககால மக்கள் புழுதி உழவு செய்து பயிர் விளைவித்து உள்ளனர் என்பதை அறியலாம்.*

*சங்க கால தமிழர்கள் மூங்கில் நெல், பலாவின் பழம், வள்ளிக்கிழங்கு, தேன் ஆகியவைகளைப் பயிர் இடாமலேயே விளைச்சல் பெற்றுள்ளனர் என்பதை,*

*"உழவர் உழாதன நான்குபயன் உடைத்தே*
*ஒன்றே சிறியிலை வெதிரின் நெல்விளை யும்மே;*
*இரண்டே, தீம்சுளைப் பலவின் பழம் ஊழ்க் கும்மே,*
*மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்கு வீழ்க்கும்மே,*
*நான்கே, அணிநிற ஓரி பாய்தலின், மீது அழிந்து,*
*திணி நெடுங் குன்றம் தேன்சொரி யும்மே; (புறம் 109: 3-8)*

*என்ற பாடல் மூலம் சங்ககால மக்கள் விவசாயம் மூலமும், உழாமல் செய்த பொது வருவாய் மூலமும் பொருட்கள் ஈட்டி வந்தனர் என்பது பெறப்படும் இப்படி செல்வம் மிகுதியாக வளம் நிறைந்த நாட்டில் பொருளாதார நிலை மேன்மை என்பது அந்நந்த நாட்டு விளைபொருள்களின் உற்பத்தி மூலமே அமைகின்றது என்பது புலப்படும்.*

கனிவளமும் பிறவளமும்

சங்ககாலத் தமிழகத்தில் தொழில் வளம் பெருகி வளர்வதற்கும், பொருளாதாரத்தில் உயர்ந்து விளங்கியதற்கும் வாய்ப்பாகக் கனிம வளங்களும் பிற இயற்கை வள வாய்ப்புகளும் இயல்பாகவே அமைந்திருந்தன. பொன், வெள்ளி, செம்பு, இரும்பு போன்ற பொருள்களும், தந்தம், சந்தனம், முத்து, மணி வகைகள், மயில் தோகை, மூலிகைகள் போன்றனவும் மிகுதியாக இருந்தன. அதனை மெய்ப்பிக்கும் வகையில் இருங்கோ வேளைக் கபிலர்,

"செம்பு புனைந்து இயற்றிய சேண்நெடும் புரிசை" (புறம் 201-9)

"பொன்படு மால்வரைக் கிழவ வென்வேல்" (புறம் 201-18)

"கடறுமணி கிளர, சிதறுபொன் மிளிரக்" (புறம் 202-3)

என்று வரும் பாடல் அடிகள் பொன்னும், மணியும், செம்பும், இருந்து பொருள் பெற்று திகழ்ந்தனர். சங்கத்தமிழர் நாணயம் பற்றியும் அறிந்து இருந்தனர். இன்று அகழ்வாராய்ச்சியின் மூலம் கிடைத்துள்ள சில நாணயங்களை வைத்துப் பார்க்கும்போது அறியலாம். புலவர்களும் பரிசாக நிறைய பொற்காசுகளை பெற்றனர் என்பதும் அறிய முடிகின்றது.

வாணிபம்

பழந்தமிழர் உயர்ந்த நாகரிகமும் பண்பாடும் கொண்டு விளங்கிய சமுதாயத்தின் மாட்சியை அவர்களிடையே நிலவிய வணிக நிலையை ஆய்வதன் வாயிலாக நன்குணரலாம். தங்கள் தேவையைப் பண்டமாற்று முறையில் நிறைவு செய்து கொண்ட அவர்கள் பின்னர் பொருட்களை விலைக்கு விற்றும் வாங்கியும் பயன்படுத்தியும் வந்த நிலையைக் காண்கிறோம். நம் மக்கள் கொண்டிருந்த அயல்நாட்டு வாணிகத் தொடர்பினைச் சங்க இலக்கியத்தாலும் தமிழகத்தும் பிற நாடுகளிலும் மேற்கொண்ட ஆராய்ச்சி முடிவுகளாலும், தமிழகம் பற்றிப் பிறநாட்டார் குறித்து வைத்துள்ள வரலாற்றுக் குறிப்புகளாலும் உணரமுடிகின்றது. வேளாண்மையைப் போன்றே வாணிபமும் சமுதாய வாழ்விற்கு மிக அவசியம் என்று சங்ககாலத் தமிழ் மக்கள் உணர்ந்து வாணிபமும் செய்துள்ளனர். ஓரிடத்தில் கிடைக்காத பொருட்களை அவை கிடைக்கும் இடத்திலிருந்து கொண்டு வந்து வாணிபம் செய்தனர். மக்கள் உள்நாடு, வெளிநாடு என இரு வாணிப முறைகளையும் மேற்கொண்டு நடத்தி வந்துள்ளனர். கடல் கடந்தும் வாணிபம் செய்து அயல்நாட்டினருக்குக் கிடைக்காத தந்தம், முத்து, மிளகு, சந்தனம், மயில்தோகை, வாசனைப் பொருட்கள், மூலிகைகள், மரவகைகள் இவற்றை ஏற்றுமதி செய்தும், இவற்றிற்குப் பதிலாக குதிரை, நாணயங்கள், மது வகைகள் ஆகிய பொருட்களை இறக்குமதி செய்தும் வாழ்ந்தனர். சங்ககாலத்தமிழர்கள் அன்றாட வாழ்விற்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் உற்பத்தி செய்தனர். அவைகள் கடைவீதிக்கு எடுத்துச் செல்லப்பட்டன. அதுபோல் வணிகர்கள் உப்பு ஏற்றிச் செல்லும் வண்டிகளைப் பற்றி பாரி மகளிர் எண்ணிக்கொண்டு இருப்பதைக் கபிலர்,

"ஈத்துஇலைக் குப்பை ஏறி, உமணர்
உப்புஓய் ஒழுகை எண்ணுப மாதோ;" (புறம் 116: 7, 8)

என்ற பாடல் மூலம் கூறுகிறார். தமிழகத் துறைமுகங்களில் பிற நாட்டுப் பொருள்களைக் கொணர்ந்து இறக்கியபின் இங்கிருந்த பொருள்களை ஏற்றிச் செல்லும் காட்சி பழங்காலத் தமிழ் நூல்களில் சித்திரிக்கப்பட்டுள்ளது.

வரிவருவாயும் கொடையும்

சங்ககாலத்தில் அனைத்துச் சொத்துக்களுக்கும் அதிகாரியாக இருந்தவன் அரசனே. மக்கள் அனைவரும் தம் வருவாயில் ஆறில் ஒரு பகுதியைத் திறையாக வேந்தனுக்கு வழங்கினர். பொருள்கள் வேந்தனிடம் குவிய அவனே பெரும் செல்வனாக விளங்கினான். இவ்வாறு அக்கால அரசியல் நடைமுறையில் இயற்கையாக ஏற்பட்டிருந்த செல்வக் குவியலைப் பிறருக்குக் கொடுக்கவும் ஒரு நடைமுறை மேலோங்கி இருந்தது. அதுதான் கொடை முறையாகும். பொருள் குறைந்தோர் பொருளின்றி நொந்தோர், நொந்துவந்தோர் இவர்களுக்கு வரையாது வழங்கும் மனம் தளராது கொடுக்கும் வள்ளல்கள் இருந்தார்கள். பண்டைக்கால வள்ளல்கள் பயன் கருதிக் கொடுக்கும் பழக்கம் உடையவர் அல்லர். கைமாறு கருதாது கணக்கற்ற பொருள்களைக் கொடையாகக் கொடுத்துள்ளனர். அங்ஙனம் வாரி வழங்கிய பாரி வள்ளலைப் பற்றிப் புகழ்ந்து பாடுகிறார் கபிலர்.

*"கடவுள் பேணேம் என்னா, ஆங்கு*
*மடவர் மெல்லியர் செல்லினும்*
*கடவன், பாரி கைவண்மையே"* (புறம் 106: 3-6)

அருளும் கடவுள் போல் அவனைக் காணச் சென்றால் தன் கொடைத் தன்மையில் பாரி வள்ளல் தவற மாட்டான். பரிசு வேண்டுவோர் கேட்டால் கொடையறத்தைப் பாதுகாத்துத் தன்னையே தந்து அவர்கள் ஆணை வழி நிற்பான் என்பதனை,

*"பாரியும் பரிசிலர் இரப்பின்*
*வாரேன், என்னான், அவர் வரையன்னே"* (புறம் 108: 5, 6)

மாரியைப் போல பயன் கருதாது தருபவன் வாடிய முல்லைக் கொடிக்குத் தன் தேரினையே தந்து நின்றவன். பாரியைப் போலவே இல்லை என்று வந்தவர்க்கு வற்றாத பொருள் அளித்தவன் பேகன் புண்ணியத்திற்காகத் தருமம் செய்யும் எண்ணம் உடையவன் அல்லன், மறுமையை நோக்குபவனும் அல்லன் புலவரது வறுமையைப் போக்குபவன் இங்ஙனம் மன்னர்கள் வரிகள் பல பெற்றாலும் கொடை உள்ளத்தோடு வாழ்ந்த வள்ளல்களைத் தெள்ளத் தெளிவாய் எடுத்துக்காட்டும் இலக்கியக் கண்ணாடியே புறநானூற்றில் கபிலர் பாடல்கள் இதனையே வள்ளுவரும்,

*"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது*
*ஊதியம் இல்லை உயிர்க்கு"* (குறள்-231)

என்று குறிப்பிடுகிறார். தனிமனிதனுக்கும் சமுதாயத்திற்கும் பொருள் தேவை. அதுபோலவே ஒரு நாட்டின் ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டிருக்கும் மன்னனுக்கும் பொருட்செல்வம் தேவையாகின்றது. மன்னன் தன் பொருட் தேவையில் பெரும் பகுதியைப் போர் மூலம் தேடிக்கொண்டான். அவ்வாறு பெரும்பொருள் வருவாயினையும் நாட்டு மக்களிடமிருந்து வரியாகப் பெற்ற பொருள், நாட்டு நலனிற்கே செலவிடப்பட்டது. தன் முயற்சியில் பெற்ற பொருளைத் தக்கார்க்குக் கொடை கொடுத்துக் களித்தான். நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்கும் பொசிவது போல ஏனையோர்க்கும் மன்னர்கள் கொடை வழங்கினர்.

## பொருளியல் கோட்பாடு

சங்ககாலத் தமிழ் மக்களைப் பொறுத்த வரை அவர்கள் பெரும்பாலும் பொருட்பற்று இன்றியே வாழ்ந்தனர். உண்பொருளாயினும் பிறபொருளாயினும் அன்றாடத் தேவை நிறையுமாறு ஓரளவு கிடைப்பதாயின் போதும் என்ற மன அமைதி பெற்றனர். பல தலைமுறைக்குச் சேர்த்து வைக்கும் அளவிற்குச் செல்வம் பெறினும் செல்வத்துப் பயனே ஈதல் எனக் கருதி பெற்ற அனைத்தும் பிறருக்கு வழங்கி மகிழ்ந்தனர். நிலையாமையை வலியுறுத்திய அன்றைய அறநெறிக் கோட்பாடும் அதனை உறுதி செய்வது போல அமைந்த போர்ச் சூழலும் அவர்களை அவ்வாறு வாழச் செய்தன. குன்றா வளமும் குறைவிலா உழைப்பும் பிற இயற்கை வள வாய்ப்புகளும் சங்ககாலத் தமிழகத்தில் இயற்கையாகவே இருந்தன. தொழிலும் வாணிபமும் செழித்து வளர்ந்து இருந்தன எனினும் இவற்றை ஒருங்கிணைத்துப் பார்ப்பின் பொருட்பெருக்கத்திற்கு ஏற்ற முயற்சிகளில் அன்று எவரும் ஈடுபடவில்லை. அளவறிந்து வழங்காத அன்றைய தமிழர் வாழ்வு வளம் போலத் தோன்றினும் இறுதியில் நிலையாமைக் கொள்கையில் மிகுந்த பிடிப்பு உடையவராய் இருந்தனர் என்று கபிலர் பாடல்கள் மூலம் அறிய முடிகின்றது.

## முடிவுரை

விவசாயம், வாணிபம், வரி, கொடையும் சங்ககாலச் சமூகத்தையும் பொருளாதாரத்தையும் சிறப்பானதாக மாற்றி இருந்தாலும் போர்கள் மலிந்திருந்தன என்பதனை புறநானூற்றுப் பாடல்களின் அடிப்படையில் அறிய முடிகின்றன. இருந்தாலும் மனிதன் என்றால் அவனைப் புகழ்ந்து பேச வேண்டும். எத்தனையோ கோடிக்கணக்கான மனிதர்கள் பிறந்தார்கள், வாழ்ந்தார்கள், மறைந்தார்கள், இன்றும் வாழ்கிறார்கள். இவர்களிலே ஒரு சிலரைப் பற்றித்தான் உலகம் அறியும் நாமும் அறிவோம். புகழ்பெற்று வாழவேண்டுமானால் அறம், பொருள், இன்பம் இம்மூன்றையும் மக்கள் பெற வேண்டும். இம்மூன்றையும் பொருளாகக் கொண்டே பாடல்கள் நூல்களும் இயற்றினர். பொருள் என்பது செல்வம் முயன்று அதைச் சேர்க்க வேண்டும் அப்பொருளால் இன்பந் துய்க்க வேண்டும் அப்பொருளால் அறம் புரிய வேண்டும் அறம்

புகழைத் தரும் பெருமையை உண்டாக்கும் என்பதை எடுத்து உலகுக்கு சொல்லும் வண்ணம் புறநானூற்றில் கபிலர் பாடல்கள் அமைந்துள்ளது.

துணைநூற்பட்டியல்


1. சுப்பிரமணியன் ச.வே. - புறநானூறு மூலமும் தெளிவுரையும்
மணிவாசகர் பதிப்பகம்
பாரிமுனை, சென்னை-600 108.
பதிப்பு-2010
2. பாலசுப்பிரமணியன் கு.வெ. - புறநானூறு மூலமும் உரையும்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
அம்பத்தூர், சென்னை-600 098.
பதிப்பு-2014
3. இளம்பூரணர் - தொல்காப்பியம் பொருளதிகாரம்
முல்லை நிலையம், தி.நகர்,
சென்னை-600 017.
பதிப்பு-2002
4. பாரதியார் - கவிதை முழுவதும் திருமகள் நிலையம்,
தி. நகர், சென்னை-600 017.
பதிப்பு-2019
5. வரதராசனார் மு. - திருக்குறள் தெளிவுரை
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
சென்னை-600 018.
பதிப்பு-2001


********* ********* ********** ********* ********* ********** ********** **********